Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 89 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 10 ஆம் நாள் துல்ஹஜ் 9 (22-4-64) புதன்கிழமை இதழ் 71

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# சேவையை நீடிக்க விரும்பும் ஆசிரியர்

## பிறப்புப்பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும்; ஆனால் அதைப்பெறுவதில் சங்கடம்

யாழ்ப்பாணம், புதன்

55 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தமது 60-வது வயதுவரை வருடா வருட சேவையை நீடிப்பதற்கு தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கவேண்டு மென்றும் இவ்விதம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதவர்கள் ரிஜிஸ்டார் ஜெனரலிடமிருந்து இதற்கான பத்திரத்தைப் பெற்று சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கல்வி இலாகா அறிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்டவர்களில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்கள் ரிஜிஸ்டார் ஜெனரலிடம் பிறப்பு உறுதிப்பத்திரத்தைப் பெற முயன்றபோது அவர்களுக்கு அவ்வித பத்திரம் வழங்கும் உரிமை ரிஜிஸ்தார் ஜெனரலுக்கு இல்லையெனப்பதில் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம் 24-வது பகுதியின் 6-வது உபபிரிவின்படி 50 வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு பிறப்பு பதிவதற்கு ரிஜிஸ்டார் ஜெனரலுக்கு அதிகாரம் இல்லை. இவ்வித நிலையால் இங்கு பலர் அவதிக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

# கவிஞர் பாரதிதாசன் காலமானார்

சென்னை, ஏப். 21

கவிஞர் பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) தமது 73-வது வயதில் இன்று சென்னையில் காலமானார். அன்னாரின் சடலம் இன்று அவரது சொந்த ஊரான புதுச்சேரிக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கவிஞர் பாரதிதாசன் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஆசியுடனும் பாராட்டுதல்களுடனும் கவிதை புனைய ஆரம்பித்த கவிஞர் பாரதிதாசன், தன்னிகரற்ற கவிஞராக விளங்கி நூற்றுக்கணக்கான கவிதைகளையும் 30-க்கு மதிகமான தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார். தமிழ் புலவர் பாரதிதாசன், சில காலங்களுக்கு முன்னர் கவிதைத் தொகுதியொன்றையும் காவியமொன்றையும் வெளியிட்டிருந்தார். திரைப்படங்களுக்கு ஏராளமான பாடல்களை எழுதியுள்ள அவர், சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த 'பொன்முடி' படத்தின் கதை வசனத்தையும் எழுதியிருந்தார்.

சமூகத்துறையில் புரட்சிகரமான கவிதைகளையும் நூல்களையும் வெளியிட்டிருந்ததால் அவர் மக்களால் புரட்சிக்

(6-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் மேதினக் கொண்டாட்ட ஏற்பாடுகள்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க, தனியார் துறைகளிலுள்ள தொழிற்சங்கங்கள் அடங்கிய மகாநாடு ஒன்றினை நடத்திய அரசாங்க எழுதுவினைஞர்சங்க யாழ்ப்பாணக் கிளை 'மேதின விழா நடவடிக்கை மத்தியகுழு' வைத் தெரிவுசெய்துள்ளது. இதுவரையும் மேதின விழாவில் கலந்து கொள்ள 15 தொழிற்சங்கங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ்ப்பாணக்கிளை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மேதினவிழா சம்பந்தமான ஆலோசனைக்கூட்டத்தை நடத்தியது. ஆசிரியர்சங்கங்கள், தனியார் அரசாங்க துறைகளில் உள்ள தொழிற்சங்கங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

மேதினவிழாவைக் கவனித்துக் கொள்வதற்கான மத்திய கமிட்டி ஒன்றினைத் தெரிவு செய்துள்ளனர். யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேதினவிழாவில் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

காங்கேசன்துறை, பலாலி, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களிலிருந்தும் தொழிற்சங்க, ஆசிரியர்சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணநகரை அடைந்து நகரவீதிகளில் பெரிய ஊர்வலமொன்றினையும் நடத்துவர்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளன யாழ்ப்பாணக் காரியாலயத்திலிருந்து கம்யூனிஸ்ட பிரதேசக் கமிட்டியின் மேதின ஊர்வலம் முற்றவெளி மைதானத்தை நோக்கிச்செல்லுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 5-30 சபாவின் சங்கீதக் கல்லூரி மாணவிகள் பாட்டு; 5-45 செல்விகள் வனிதாமணி, தவரஞ்சனி-பாட்டு; 6-00 செல்வி ஞானம்பிகை முருகேசு- தனிவயலின்; 6-45 சங்கீதக்கல்லூரி மாணவர்கள்-மிருதங்க இசை; 7-15 திரு ஏ. நமசிவாயம் - வேணுகானம்; 80-3 தலைமையுரை-புலவர் நா. குமாரசாமிப்பிள்ளை; 8-45 திரு. ராம். குமாரசாமி-பாட்டு; 10-00 செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதம் பாட்டு.

சாவகச்சேரி தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு இசை விழா இன்று சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் முன்றிலில் ஆரம்பமாகின்றது. ஐந்து நாட்கள் வரை நடைபெறும் இவ்விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் திரு. வ. ந. நவரத்தினம் எம். பி., தலைமையில் நடைபெறும்.

மலேசியா தகராறு

# டோக்கியோவில் உச்சி மகாநாடு?

## மே. 10-ல் நடைபெறலாம்

அங்காரா, ஏப். 21

மலேசியத் தகராறு சம்பந்தமாக மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷிய நாட்டுத் தலைவர்களிடையே ஒரு உயர்தர மகாநாடு அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறலாமென்று அங்காரா செய்தி ஸ்தாபனமொன்று அறிவித்துள்ளது.

இந்த மகாநாடு அநேகமாக அடுத்த மாதம் 10-ம் திகதி கூட்டப்படலாமென்றும் அந்த செய்தி ஸ்தாபனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த மகாநாட்டுக்கு பிலிப்

(6-ம் பக்கம் பார்க்க)

## சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு ஜூலை 8-ல் நடைபெறும்

லண்டன், ஏப். 21

சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் எட்டாம் திகதி நடைபெறுமென்று பிரிட்டிஷ் பிரதமர் சர். அலெக் டக்ளஸ் ஹியூம் இன்று அறிவித்தார்.

நயர்ஸலாந்து நாட்டின் சுதந்திரதினமான ஜூலை 6-ம் திகதிக்குப் பின்னரே இம் மகாநாடு நடைபெறுகிறது.

# "கம்ப இராமாயணத்தை சிங்களத்தில் வெளியிடவேண்டும்"

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நீதியரசர் தம்பையா

நல்லூர், புதன்

'கம்பஇராமாயணம் காவியம் மட்டுமல்ல. சமுதாய ஒற்றுமைக்கும் உரியது. கம்ப இராமாயணத்தை சிங்களத்தில் மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா இலங்கை கம்பன் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நீதியரசர்டாக்டர் எச். டபிள்யு. தம்பையா தலைமையில் கம்பன் கழக அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெற்றது. நீதியரசர் தமது உரையில் கூறியதாவது:

கம்பராமாயணத்தை யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் சரியாக உணர்ந்து கௌரவிக்கவில்லை என்று நினைக்கின்றேன். கம்பராமாயணம் பற்றி ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இராமாயணம் பற்றிய போட்டிகளை நடத்த வேண்டும்.

முதல்வியார் சி. முத்துத்தம்பி தமது உரையில் தமிழ்மொழிக்குப் பெருமை தேடித்தந்தவர்களை நாமறிந்து கௌரவிக்காவிட்டால் பிறமொழியினர் கௌரவிக்கும் சந்தர்ப்பம் இல்லாது போய்விடும் என்று கூறினார்.

கழகத்தின் நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

## ஆளும் கட்சித் தலைவர் எதிர்க்கட்சியில் சேர்ந்தார்

மணிலா, ஏப். 21

பிலிப்பைன்ஸ் அதிபர் மகாபகலின் லிபரல் கட்சித் தலைவர் திரு. மார்க்கஸ், ஆளும் கட்சியான லிபரல் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் சேர்ந்துள்ளார்.

1947-ம் ஆண்டிலிருந்து லிபரல் கட்சியிலிருந்த திரு. மார்க்கஸ் அதிபர் மகாபகலின் ஒரு வலக்கரம் போன்றவர் எனக் கருதப்படுகிறது. ஏற்கனவே இரு முக்கியஸ்தவர்கள் இக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ளனர்.

# இலங்கையர்மயம் காரணமாக இந்தியர் தாயகம் திரும்புகின்றனர்

புதுடில்லி, ஏப்ரல் 21

பர்மாவிலிருந்து வெளியேறும் இந்தியர்கள்பற்றி இந்திய அரசாங்கம், பர்மிய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

பர்மாவில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும், வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டதன் விளைவாக இந்தியர்கள் தாடுதிரும்புவதாய் அறிவிக்கப்பட்டது.

இலங்கையர்மயத் திட்டம், தேசியமயம் ஆகியவற்றின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியர்கள் தாயகம் திரும்புவதாய் மேலும் அறிவிக்கப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளிலும் ஆபிரிக்க மயம் காரணமாக அவர்கள் நாடுதிரும்புவதாய் அறிவிக்கப்பட்டது.

### மணிவாக்கு

சர்வோதயத்தின் முறை அரசாங்கத்தின் சக்தியை, அதிகாரங்களைச் சிறிது சிறிதாகக் குறைப்பதாகும். இறுதியில் ஆட்சியே இல்லாதுபோகும். காந்தியடிகள் போதித்த சர்வோதயச் செயல்முறை இவ்வாறுதான் இருக்கும்.

— வினோபாஜி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை ஸ்ரீ 10 உ (22-4-64)

## காந்திய ஐந்து வருடத் திட்டம்

இன்னும் ஐந்து ஆண்டுகளிலே காந்திஜயந்தி நூற்றாண்டுவிழா நடக்க இருக்கிறது. அதற்குள் கதரை அடிப்படையாகக் கொண்டு தேசத்திலுள்ள கிராமங்களையெல்லாம் சிரமதான கிராமங்களாக ஆக்கி நூற்றாண்டுவிழாவைக் கொண்டாட வேண்டுமென்றும் ஒவ்வொரு கிராமமும் சுதந்திரக் குடியரசுகளாகி உருவாக வேண்டுமென்றும் ஆசார்யவினோபாபாவே இந்தியர்களுக்கு ஒருமுக்கிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதைத் தழுவி இலங்கையிலும் காந்தீய சர்வோதயக் கொள்கைகளின் அடிப்படையிலே ஓர் ஐந்தாண்டுத்திட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்று நீர்வேலி சிரமதான இயக்க ஆரம்பவிழாவில் திரு. நேசையா கல்லதோர்யோசனை கூறினர். இந்தியாவில் வினோபாஜியின் தலைமையில் நடைபெறும் சிரமதான இயக்கம் உலகத்துக்கே ஒரு புதுமை. அந்த இயக்கம் இங்கு ஆரம்பிக்கப்படுவது அவ்வளவுசுலபமன்று. என்றாலும் இங்கு காந்தீய கொள்கைகளுக்கு விசேஷ ஆதரவு இருக்கிறதென்பதற்கு சிரமதான இயக்கம் நாட்டின் பல இடங்களிலும் வெற்றிகரமாக நடப்பது ஓர் அத்தாட்சியாகும், ஆகவே திரு. நேசையா கூறியபடி இலங்கைக்கு உகந்த முறையிலே காந்தீய கொள்கைகளைத் தழுவி ஓர் ஐந்தபண்டுத் திட்டத்தை வகுத்து நடத்துவதாயின், அரசாங்கம் உள்ளிட்டு மக்களின் ஆதரவு அமோகமாகக் கிடைக்கவும் இதனால் நாடு நலம்பெறவும் முடியும்.

இந்திய அரசியல் விடுதலைக்கு மகாத்மா வகுத்த நிர்மாணத் திட்டத்திலே கதர் ஒரு முக்கிய இடம் பெற்றது. அச்சமயம் பலர் இதைப் பரிகசித்தனர். ஆனால் கதர் தேச விடுதலை வீரர்களின் ஓர் உடையாக அமைந்ததுடன், நாட்டில் பலருக்கு ஜீவனத்துக்கும் ஓரளவு வழிசெய்தது. வேலையற்ற, உணவற்றவர்களுக்கு ஒரு கவள அன்னத்துக்கு வழியுண்டு என்ற நம்பிக்கையையும் ஊட்டியது. இதனால் லட்சக்கணக்கானவர்கள் பயனடைந்தனர். நாடு விடுதலை பெற்றபின்பும் கதர், உடை சுயதேவைப் பூர்த்தி மூலம் கிராமப் பொருளாதாரத்தை அமைப்பதற்கான அடிப்படை அம்சமாகிவிட்டதென்கிறார் வினோபாஜி. கதர் இயக்கம் அங்கு புதிய ஆக்கம் பெற்று இப்போது வளர்ந்து பலருக்கும் நன்மை அளிப்பதைப் பார்க்கின்றோம்.

இது இலங்கைக்கும் நாம் ஏற்கனவே இப்பத்திகளில் குறிப்பிட்டதுபோல் இச்சமயம் பெரிதும் பயன்படும். துணிக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் சங்கடப்படுவதால் இப்போது இந்தக் கதர் இயக்கத்தை இலங்கையில் ஆரம்பிக்க இதுநல்ல தருணம். பொதுமக்களில் பலர் இதில் ஈடுபடத் தயாராக இருக்கின்றனர். ஆனால் இந்த இயக்கத்தை இங்கு யாரும் ஆரம்பிக்க முன்வராதது துரதிருஷ்டம். காந்தி சேவாசங்கத் தலைவர் கூறியதுபோல் இங்கு காந்தீய ஐந்துவருட திட்டத்தை ஆரம்பித்து முதல் வருடத்திலேயே கதர் உற்பத்திக்கு வழிவகுப்பதாயின் அது மிக நல்லசேவையாகவுமிருக்கும்.

இந்த இயக்கம் இலங்கைக்குப் புதியதல்ல. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் இதன் முக்கியத்தை உணர்ந்து, கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார். சுயதேவைத் திட்டத்தைப் பூர்த்தி செய்து நாட்டின் செல்வத்தைக் காத்து, பலருக்குவேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டி இருப்பதால், அந்த வேலையை இப்போது இங்கு மீண்டும் ஆரம்பிப்பது பலவிதங்களிலும் அவசியமாகின்றது. காந்தீய, சர்வோதய இயக்கங்களில் ஈடுபட்டவர்கள் இதை அரசாங்கத்துக்குத் தக்கபடி எடுத்துக்கூறி இந்திய கதர் நிபுணர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற முன்வர வேண்டும். இதற்கு அரசாங்கம் முட்டுக்கட்டை போடநியாயமில்லை. கதர், கிராமக் கைத்தொழில் முதலிய காந்தீய திட்டத்தை நமக்குத் தேவையானபடி வகுத்து நடத்தி வைக்க இதுசமயம் முன்வருபவர்கள், நாட்டுக்கு மேலான சேவை செய்து, பொதுமக்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்கள்.

# தியாகத் திருநாள்

— எம். கே. ஏச். முகம்மது —
(எருக்கலம்பிட்டி)

**முஸ்லிம்கள் நாளை ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். தியாகத் திருநாளாகக் கருதப்படும் இப்புனித தினத்தின் நோக்கத்தைச் சுருக்கமாக இக்கட்டுரை விளக்குகின்றது.**

இஸ்லாம் மதத்தின் ஐம்பெருங் கடமைகளுள் ஐந்தாவது இடத்தை வகிப்பது 'ஹஜ்ஜு' யாத்திரையாகும். ஒவ்வொரு முஸ்லிமும் தனது சீவிய காலத்தில் ஒருமுறையாவது திருமக்காநகர் சென்று புனித கஃபாவைத்தரிசித்து வரவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது. எனினும் உடல் வலி குன்றியவர்களும் அன்றாட வாழ்க்கையை ஓட்ட வழியின்றித் திண்டாடித் திரியும் ஆண்டிகளும் இக்கடமையினின்றும் விடுபட்டுள்ளனர்.

இப்புனித 'ஹஜ்ஜு' என்னும் கடமையை நிறைவேற்ற உலகின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் முஸ்லிம்கள் மக்கா நகர் வந்து குவிவர். இவர்கள் அனைவரும் மொழி, நிற பாகுபாடின்றி, ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு அகல, ஆண் பெண் என்ற பேதமற (தையல் இல்லாத) வெண்துகில் அணிந்து (ஆண்கள் உரோமங்களைக் களைந்தும்) தோளோடு தோள் முட்ட ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த புதல்வர்களைப் போன்று வேதப் பொருளாம்-ஏக தலைவன்-எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சமூகத்தில் நன்றி கலந்த முகத்தோடு சிரந்தாழ்த்தி வணங்கி நிற்பர். "மானிடர் யாவரும் சகோதரர்கள். அருளாளன் முன் சகலரும்சமம்" என்றஅரிய உண்மைகளை இக்க ஹஜ்ஜு வணக்கம் எடுத்தியம்பா நிற்கிறது.

உலக ஆசாபாசங்கள் அனைத்தையும் அடியோடு மறந்தவர்களாய் "அல்லாஹு அக்பர்! அல்லாஹும்ம லப்பைக்!! லாசரீக்க லபபைக்!!!" என்ற குரல்கள் ஏக காலத்தில் தொனிக்க உண்மைப் பொருளாம் அல்லாஹ்வை வணங்கியும் வேறு மார்க்க அனுட்டானங்களில் தம்மை ஈடுபடுத்தியும் ஹஜ்ஜாஜிகள் இம்மாதத்தின்முதல் ஒன்பது திங்களையும் கழிப்பர். அல்லாஹ்வினல் சாட்டப்பட்ட கடமைகளை நிறைவேற்றி விட்ட அவர்கள் மனநிறைவோடு மகிழ்ச்சி பொங்க பத்தாம் திங்களைத் திருநாளாகக் களிப்பர். ஹஜ்ஜாஜிகளான சீதேவிகளின் பெயரால் இத்தினத்தை உலக முஸலிம்கள் அனைவரும் தமது திருநாளாகக் கொண்டாடி மகிழ்வர்.

முஸ்லிம்கள் "அல்லாஹு அக்பர்" என்ற தக்பீரை முழக்கி ஆடு மாடு போன்ற மிருகங்களைக "குர்பான் செய்து" (இறைச்சி தானம் செய்தல்) இப்புனித தினத்தை அலங்கரிப்பர். "இக்குர்பானி" சரித்திரப்புகழ் பெற்ற தியாகத்தின் ஒரு சின்னமாக விளங்குகின்றது.

### குர்பானியின் நோக்கம்

ஒரு நாட்டுக்குத் தேவையான சட்டங்கள் தொகுக்கப்பட்டிருப்பினும் அச்சட்டங்களைச் செயறபடுத்த ஆட்சியாளர்கள் எவ்வாறு அவசியமோ அதே போன்று இறைவனின் சட்ட திட்டங்களையும் கட்டளைகளையும் (சுகுபுகள்,வேதங்கள்) செயற்படுத்தி மக்களை நல்வழிப்படுத்துவதற்கு அல்லாஹ் அடிக்கடி இறைத் தூதர்களை உலகத்தில் தோன்றச் செய்தான். இவ்வாறு தோன்றியவர்கள் ஒரு லட்சத்து இருபத்தினலாயிரம் என்பர். இவர்களுள் ஒருவர்தான் நபி இபுறாகீம் (அலை) அவர்கள். இவர்கள் தமது ஏக புதல்வனை நபி இஸ்மாயில் (அலை) அவர்களை குர்பான் செய்வதாகக் (அறுப்பதாக) கனவொன்று கண்டார்கள். தாம் கண்ட அக்கனவை உண்மைப்படுத்துவதற்காக வேண்டி தமது அருந்தவப் புதல்வனையும் அழைத்துக் கொண்டு தனியிடந்தேடி மக்கா நகரின் மலையடிவாரத்திற்குச் சென்றார்கள். அங்கு சென்றதும் தம் அங்கியினுள் மறைத்து வைத்திருந்த கூரிய வாளை வெளியில்எடுத்து,தான் கண்டகனவைகூறி அக்கனவை மெய்ப்பிக்கவே தம்மை அழைத்து வந்ததாகத் தமது புதல்வரிடங் கூறினர்கள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இஸ்மாயில் (அலை) அவர்களும் அல்லாஹ்வின் கட்டளையைத் தன் தந்தை நிறைவேற்றுதற்குத் தமது பூரண சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் நல்கினர்கள். தனயனைத் தரையில் கிடத்தியபோது மகவின்பாசம் தம்மை ஒருபுறம் இழுக்க, கடமை மறுபுறம் தூண்டநடுவே கிடந்து தத்தளித்த நபியவர்கள் ஈற்றில் தமது கடமையை நிறைவேற்றத் துணிந்தார்கள். மகனின் பாசத்தால் தாம் ஒரு வேளை கடமையினின்றும் தவறக்கூடும் என நினைத்த அவர்கள் தமது முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு கழுத்தில் வாளைச் செலுத்தினர்கள். அறுபடாதிருக்கக்கண்ட அவர்கள் வாளை மேலும் கூர்மையாக்கிக் கொண்டு மீண்டும் தமது கடமையை நிறைவேற்ற முனைந்தார்கள். இம்முறையும் கழுத்து அறுபடாதிருக்கக்கண்ட நபியவர்கள் கோபத்தினல் தரையில் வாளால் ஓங்கி வெட்டினர்கள். உடனே வெட்டிய அவ்விடத்திலிருந்து நீரூற்று ஒன்று பிரவாகித்து ஓடத் தொடங்கியது. அந்நீர்ப்பெருக்கைத் தடைசெய்வான் வேண்டி "ஸம்! ஸம்!!" (நில், நில்) எனக் கூறினர்கள். இதனல் இவ்வூற்று தற்போது 'ஸம் ஸம்' கிணறு என அழைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி நடந்தபோது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி ஒலித்தது. "நபியே! நீர் உமது கனவை உண்மையாக்கிவிட்டீர். அடியார்களை நாங்கள் இவ்விதமாகத்தான் பரீட்சிப்போம்" என்று கூறியது அவ்வசரீரி. இறைவனின் தயாள சிந்தையை நினைந்து, அவனைப் புகழ்ந்து இருவரும் நன்றியறிதலோடு சிரந்தாழ்த்தி வணங்கி நிற்கும்போது, ஜிப்றீல் (அலை) அவர்கள் ஒரு தும்பை ஆட்டுடன் தோன்றி, நபி இஸ்மாயில் (அலை) அவர்களுக்குப்பதிலாக அவ்வாட்டை குர்பான் செய்யுமாறு பணித்தார்கள். இபுறாகீம் நபியவர்களும் ஏகனின் திருநாமத்தை உச்சரித்து அவ்வாட்டை அறுத்து, அதன் மாமிசத்தின் ஒருபகுதியைத் தாம் எடுத்துக்கொண்டு மிகுதியை அயலாருக்குத் தானம் செய்தார்கள். இச்சம்பவம் இம்மாதத்தின் பத்தாம் திங்களன்று நிகழ்ந்ததாகையால் இறுதி இறைத் தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களால் இத்தினம் குர்பான் செய்யும் புனித தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவ்வாறு செயற்படுத்தப்பட்டு வருவதோடு, அத்தினம் தியாகத் திருநாளாகக் கருதப்பட்டும் வருகிறது.

இவ்வித தியாகத்திருநாளாகிய இன்று நாம் அனைவரும் இப்புனித நாளின் மகத்துவத்தை மனதில் சிந்திப்பதோடு, நாமும் இபுறாகீம் நபியவர்கள் காட்டியது போன்று இறைவன் இட்ட கட்டளைகளுக்குச் சிரந்தாழ்த்தி நடந்துவருவதோடு, அல்லாஹ்வுக்கு விருப்பமான நற்கருமங்களையும் செய்து இத்தினத்தைப் புனிதமாக்கிக்கொள்வோமாக.

## இந்தியா நீர்மூழ்கி வாங்கும்

புதுடில்லி, ஏப். 21

பிரிட்டனில் இந்திய கடற்படை வீரர்கள்பலர் நீர்மூழ்கிப் பயிற்சிபெற்று வருகிறார்கள் என்றும், இந்தியா ஒரு நீர்மூழ்கியை வாங்கவிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டது

(5-ம் கலத் தொடர்ச்சி)

இதையாவது கொடுக்கப்படாதா? ஏன் உயிர்போன்ற பாலை, இப்படி வீணாக்கவேண்டும்? உணவைப் பாழாக்குவது பாவம். அது பெரும் குற்றமுமாகும்.

இருவாரங்களுக்குமுன் இந்தப் பால்சபைக்கு ஏழரை லட்சம் ரூபாய் நஷ்டமாம்! இப்போது எவ்வளவு நஷ்டமோ? பால்பவுட்ரை இறக்குமதிசெய்யும் நாம், இங்கு ஒரு சொட்டுப் பாலையும் வீணாக்காமல் தடுக்கவேண்டும்.

●

எம்பிரான் இமையோர்கள் தமக்கெல்லாம், இன்பராகி யிருந்த எம் மீசனர், துன்ப வலவினை போகத் தொழுதுமவர்க்(கு), அன்பராகி நின்றார் அன்னியூரரே.

—திருநாவுக்கரசர்.

## ஐயாறன் எழுதுவது

நீர்வேலி சிரமதான இயக்கத்திலே தமிழரும் சிங்களவரும் கலந்து கொண்டுள்ளனரல்லவா? இதில் யார் தமிழர், யார் சிங்களவர் என்பதைக் கண்டுபிடிப்பது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது.

கால்சட்டை போட்டிருந்த ஒரு வாலிபர் ஒரு நண்பருடன் ஆங்கிலத்தில் பேசினர். அவரை ஒரு சிங்களவரென்றே நினைத்தேன். சற்று நேரத்தில் அவர் சிரித்துக் கொண்டே தமிழ் பேசினர். பிறகுதான் அவர் ஒரு தமிழர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

கிழக்கிலிருந்து ஒரு அதிகாரி வந்திருந்தார். பார்த்தால் தமிழர் மாதிரியே இருந்தது. பெயரை விசாரித்ததில், அது ஒரு சிங்களப் பெயராக இருந்தது. அவர் ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்துள்ளாராம். தமிழுக்கு சம உரிமை அளிக்க வேண்டுமென்று பகிரங்கமாக வாதித்தார்.

* * *

சென்ற வாரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஒரு பெரிய அதிகாரியைப் பார்க்கச் சென்றேன். அவர் சட்டை போடவில்லை, இடுப்பில் வேட்டி கட்டி மேலுக்கு அங்கவஸ்திரம் போட்டிருந்தார். பார்த்தால் அசல் தமிழராகவே இருந்தது. சிங்களவரென்றால் யாரும் நம்பமாட்டார்கள்.

உலகில் பல நாடுகளிலும் யாத்திரை செய்துள்ள அவர் புகைப்பதுமில்லை, குடிப்பதுமில்லையாம். இரண்டு பழக்கமும் தமக்கு இளவயதில் இருந்ததாயும், அவற்றை விட்டுப் பல வருடங்களாவதாகவும் ஒருவித பெருமையுடன் கூறினர். ஒரு சிங்கள அதிகாரி இவ்விதமிருப்பதைக்காண ஆச்சரியமாக இருந்தது.

யாழ்ப்பாண வெயிலைப்பற்றிக் கேட்டேன். கொழும்பைவிட இங்கு தேவலாமாம! பனை ஓலை விசிறியையும், அழகான விளாமிச்சை வேர் விசிறியையும் அவர் இங்கிருந்து கொழும்புக்குப் பிரியமாக எடுத்துச் சென்றார்.

* * *

இந்தக் கோடையிலே நம்மில் பலருக்கும் எவ்வளவு தாகம்! தண்ணீர் எவ்வளவு குடித்தாலும் தாகம் தீரக் காணோம்.

நீர் மோர் இரண்டொரு 'டம்ளர்' குடித்தால் தாகம் உடன் தீர்ந்து விடுகிறது. இளநீரும் அப்படித்தான். ஆனல் நீர்மோரும் இளநீரும் குடிப்பது 'பாஷ்'ஆகுமா? 'போத்தல்' நாகரிகம் பரவிவிட்ட காலம் இது. கிராமங்களில் கூட, போத்தல் பானம் தான்! இளநீர், நீர்மோர், பானகம், நுங்கு இவைகளை நாம் அநேகமாக மறந்தே விட்டோம்! அட கடவுளே!

* * *

தினசரி நாலாயிரம் பைந்து பாலை, பால்சபையினர் மகாவலிகங்கைக்கு 'அர்ப்பணம்' செய்கிறார்களாம்! ஆமாம்!

ஏன் தெரியுமா? மலைநாட்டிலே வசூலிக்கும் இந்தப்பாலுக்கு கொழும்பிலே கிராக்கி குறைந்துவிட்டதாம். மிஞ்சிப்போன பாலில் வெண்ணெயை எடுத்துவிட்டு, பாலை சாக்கடையில் கொட்டி வந்ததாகவும், அது நாற்றமெடுக்கவே, இப்போது மகாவலிகங்கைக்கு ஒரு குழாய்மூலம் அனுப்புவதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்தப் பாலை மலைநாட்டிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாதா? அல்லது இதை மோராக்கி இலவசமாக ஊரில் விநியோகிக்கப்படாதா? "கேர்" எனும் அமெரிக்க தர்மப் பாலைத்தான் மலைநாட்டுத் தோட்டக் குழந்தைகளுக்குக் கொடுப்பதில்லை!

(4-ம் கலம் பார்க்க)

ஆயுதங்களுக்கு தேவைப்படும்

# அணுசக்திபொருள் உற்பத்தியை குறைக்க வல்லரசுகள் முடிவு

## அமெரிக்க, ரஷ்ய தலைவர்கள் வெளியிட்டனர்

லண்டன், ஏப். 21

அணு ஆயுதங்களுக்குப் பயன்படும் அணுசக்திப் பொருட்களின் உற்பத்தியைக் குறைத்துக் கொள்வதென அமெரிக்காவும் ரஷ்யாவும் நேற்று ஏக காலத்தில் வெளியிட்டன.

இதற்கான திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் வாஷிங்டனிலும் ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் மாஸ்கோவிலும் வெளியிட்டனர்.

இத்தகைய நடவடிக்கை சர்வதேச சமாதானத்தை நோக்கிச் செல்லும் வழியில் மேலும் ஓரடி முன்னேற்றமாய் இருக்கும் என திரு. குருஷ்சேவ் கூறினார்.

ஜனாதிபதி ஜோன்ஸனும் இத்தகைய கருத்தைத் தெரிவித்தார். திரு. ஜோன்ஸன் மேலும் பேசுகையில் புதிய ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்கா பொருளாதார உதவி அளித்து வருமென்றும் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வின்றி, வெள்ளையர், கறுப்பர் என்ற பேதமின்றி உலகம் விளங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## 6 நாகர் மாண்டனர்

ஷில்லாங், ஏப். 21

பாதுகாப்பு படைகள் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 6 பகை நாகர்கள் கொல்லப்பட்டனர் என்றும், ஏராளமானோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. அவர்களின் மறைவிடங்கள் பல அழிக்கப்பட்டன. 2 துப்பாக்கிகளும், ரேடியோ ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

ஹாக்கி

## 'இந்தியாவை கென்யா எதிர்க்க முடியும்'

சென்னை, ஏப். 21

கென்யா, இந்தியா ஹாக்கி கோஷ்டிகளுக்கு சென்னை நகர கார்ப்பரேஷன் ஒரு உபசரிப்பு நடத்தியது. கென்யா கோஷ்டித்தலைவர் அப்போது பேசுகையில் பாரத ஆட்டக்காரர்களிடமிருந்து தாங்கள் இன்னும் கற்றுவருவதாயும், பாரத ஹாக்கி வீரர்களை எதிர்த்து நிற்கமுடியும் எனத் தாம் நம்புவதாயும் கூறினார்.

## பூட்டான் பற்றிய செய்திக்கு இந்திய அதிகாரி மறுப்பு

புதுடில்லி, ஏப். 21

பூட்டானில் சீனர்கள் ஊடுருவல் செய்திருப்பதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி பற்றித் தங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லையென இந்திய வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

"பூட்டான் மன்னருடனும், அவரது அரசாங்கத்துடனும் அரசாங்கம் தொடர்புகொண்டிருக்கிறது. விஷயம் உண்மையானால் அவர்கள் இதுபற்றித் தகவல் கொடுத்திருப்பார்கள். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை" என்றும் அவர் கூறினார்.

"பூட்டான் எல்லையோரத்தில் சீனப் படைகள் குவிக்கப்பட்டிருப்பதை அறிந்திருக்கிறோம். 1962 அக்டோபர் மாதம் இருந்ததைவிட வட எல்லை நெடுகிலும் சீனப்படைகள் மிக அதிகமாகக் குவிந்துள்ளன என பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறினார்.

# 'ஷேக்அப்துல்லாவைசமாளிக்க எங்களால் முடியும்'

## காஷ்மீர் பிரதமர் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 21

ஷேக் அப்துல்லா கிளப்பும் எந்த அரசியல் சவாலுக்கும் ஈடுகொடுக்க காஷ்மீர் அரசாங்கத்தினால் முடியும் என அந்த ராஜ்யப் பிரதமர் திரு. சாதிக் கூறினார்.

காங்கிரஸ் எம். பி.க்களின் கூட்டமொன்றில் அவர் பேசினார்.

"காஷ்மீரில் ஷேக் அப்துல்லாவின் குரல் மட்டும் பிரதானமாக ஒலிக்கவில்லை. அவரை எதிர்ப்பவர்களும் அங்கிருக்கிறார்கள்" என்றும் திரு. ஸாதிக் கூறினார்.

இந்தியாவின் மதச் சார்பற்ற கொள்கைக்கு காஷ்மீர் ஒரு சோதனையாக விளங்குகிறதென்றும், எனவே அதை அன்னியருக்கு விட்டுக் கொடுக்க முடியாதென்றும் கல்வி மந்திரி திரு. சக்ளா ஒரு கூட்டத்தில் அறிவித்தார்.

இதே சமயம், திரு. ஷேக் அப்துல்லா ஸ்ரீநகரில் ஒரு கூட்டத்தில் பேசியபோது காஷ்மீர், முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமல்லவென்றும், அங்கு வாழும் ஹிந்துக்கள், சீக்கியர்கள் ஆகிய அனைவருக்கும் சொந்தமென்றும் கூறினார்.

"பிரதமர் நேருவை நான் சந்திக்கும்போது பிரச்னையைத் தீர்ப்பதற்கு நேர்மையான வழிகாண முடியும் என நம்புகிறேன். சர்வஜன வாக்கெடுப்பு வகுப்புப் பூசலை ஏற்படுத்துமானால் வேறு பரிகாரம் காண முயற்சிக்க வேண்டும்" என்றும் ஷேக் கூறினார்.

1958-ம் ஆண்டு இருந்தகாஷ்மீருடன் இன்றைய காஷ்மீரை ஒப்பிடுகையில் ராஜ்யத்தில் நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்றும் ஷேக் அப்துல்லா கூறினார்.

## தென் வியட்னும்

சைகோன், ஏப். 20

தென் வியட்னமில் வியட்காங் கொரில்லாக்களின் தாக்குதல் அதிகரித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## 8 எம். எல். ஏ.க்கள் கைதாயினர்

கல்கத்தா, ஏப். 20

மேற்குவங்க சட்டசபை அங்கத்தினர்கள் 8 பேர் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டனர்.

## காவேரியில்....

புதுடில்லி, ஏப். 21

காவேரி வடிநிலப் பிரதேசத்தில் எண்ணெய் கண்டுபிடிப்பதற்கு 200 மீட்டர் ஆழத்தில் தோண்டுதல் வேலைகள் நடைபெறுகின்றன.

# சுவர்ணபூமா தொடர்ந்து லாவோஸ் பிரதமர்

## உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அனைத்தும் அவருக்கே ஆதரவு

வியன்டைன், ஏப். 21

மன்னர் சவனவதனாவைக் காணும் பொருட்டு லுவாங் பிரபாங்குக்குச் சென்றிருந்த சுவர்ணபூமா இளவரசர், வியன்டயனுக்குத் திரும்பி வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இளவரசருடன் வலதுசாரி உதவிப் பிரதமரும் மன்னரைக் காணச் சென்றிருந்தார். தொடர்ந்து பிரதமமந்திரியாகப் பதவி வகிக்கும்படி மன்னர், இளவரசர் சுவர்ணபூமாவைக் கேட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. புதிய நடுநிலைமை மந்திரிசபை ஒன்றை அமைக்குமாறும் மன்னர் இளவரசரைக் கேட்டுக் கொண்டார் என அறிவிக்கப்படுகிறது.

சுவர்ணபூமாவின் நடுநிலைமை அரசாங்கத்துக்கு மட்டுமே ஆதரவளிக்க முடியும் என ரஷ்யாவும் தெரிவித்திருக்கிறது.

நடுநிலைமைப் படைத்தலைவர் ஜெனரல் காங்லீ, இளவரசர் சுவர்ணபூமாவுக்கு தாம் முழு ஆதரவு அளிப்பதாய்த் தெரிவித்திருக்கிறார்.

தற்போது லாவோஸ் தலைநகரம் அமைதியாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. அரசாங்க காரியாலயங்களிலும், கடைகளிலும் மாமூலான வேலைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

இளவரசர் சுவர்ணபூமா கைது செய்யப்பட்டிருந்தபோது அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு புரட்சி சபையைக் கேட்கும்படி பிரதமர் நேரு சர்வதேசக் கண்காணிப்புக் கமிஷனைக் கேட்டுக் கொண்டதாய் அறிவிக்கப்படுகிறது.

பாரதத்துக்கு இவ்விஷயத்தில் விசேஷ பொறுப்பு இருந்ததால்அது வியன்யடனிலுள்ள இந்தியத் தூதருடனும், சர்வதேசக் கமிஷனுடனும் தொடர்பு கொண்டதாயும் கூறப்பட்டது. இந்தோசீன ராஜ்யங்களுடன் பாரதத்துக்கு நேச உறவு இருப்பதாலும் லாவோஸ் நிலைமை டில்லிக்குக் கவலையளித்ததாய்க் கூறப்படுகிறது.

## மீண்டும் துருக்கி விண்ணப்பம்

அங்காரா, ஏப். 21

சைப்ரஸ் நிலைமை பற்றி தாம் இன்னும் கவலையடைந்திருப்பதாயும், அங்கு 30 துருக்கியர்கள் கொல்லப்பட்டிருப்பதாயும், எனவே பாதுகாப்பு சபையை மீண்டும் கூட்ட வேண்டுமென்றும் துருக்கி யுதாண்டைக் கேட்டிருக்கிறது.

## குண்டுகளுடன் இந்தோனேஷியர் கைது

சிங்கப்பூர், ஏப். 21

மூன்று இந்தோனேஷியர்களையும், இரண்டு சீனர்களையும் பொலிசார் கைதுசெய்ததாயும், சிங்கப்பூரில் சீனர் வசிக்கும் பகுதியில் மூன்று குண்டுகளைக் கைப்பற்றியதாயும் அறிவிக்கப்படுகிறது. சிங்கப்பூரில் படகுமூலம் வந்திறங்கிய ஒரு இந்தோனேஷியனிடமிருந்து இரண்டுமணி நேரத்தில் ஒரு குண்டு கைப்பற்றப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது

## பஸ் சேவை சீர்கேடு

காங்கேசன் துறை, செவ்.

இ. போ. ச. பஸ் சேவை சீர்கேடுகளினால் காங்கேசன் துறையில் பிரயாணிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். பஸ்ஸுக்காக பிரயாணிகள் கொடூர வெய்யிலில் மணிக்கணக்காக காத்து நிற்கவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது!

## இசையாளர் சங்கம் அனுதாபம்

நல்லூர், செவ்.

காலஞ்சென்ற நாதசுர மேதை காருகுறிச்சி திரு. பி. அருணசலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இசையாளர் சங்கத்தின் விசேஷ நிர்வாகசபைக் கூட்டம் அளவெட்டியில் நடைபெற்றபோது திரு. அருணசலத்தின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து செய்தி அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது. இசையாளர் சங்கப் பிரமுகர்கள் பலரும் திரு. அருணசலத்தின் இசைத்திறனைப் பாராட்டிப் பேசினர்.

காஷ்மீரில்

# ஐ. நா. பார்வையாளர் தொகை அதிகரிக்கப்படும்

## டாக்டர் பஞ்ச் சிபார்சு

ராவல்பிண்டி, ஏப். 21

ஐ. நா. உதவிக் காரியதரிசி டாக்டர் ரால்ப் பஞ்ச் ராவல்பிண்டியிலிருந்து நியூயோர்க் புறப்பட்டார். அவர் இங்கு பேசுகையில், தாம் ஐ. நா. தலைமைக் காரியதரிசியிடம் காஷ்மீர் போர் நிறுத்த எல்லைக் கோட்டில் ஐ. நா. பார்வையாளர்களையும், சாதனங்களையும் அதிகரிக்கவேண்டுமெனச் சிபார்சு செய்யப்போவதாய்க் கூறினார். டாக்டர் பஞ்ச் போர் நிறுத்தக் கோட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்.

பாகிஸ்தானியர் அடிக்கடி எல்லைக் கோட்டை மீறுவதால் அங்குள்ள ஐ. நா. பார்வையாளர் கோஷ்டியைப் பலப்படுத்தவேண்டுமென இந்தியா டாக்டர் பஞ்சிடம் கூறியிருந்தது.

## சர்க்கரை மும்மடங்காகியது

புதுடில்லி, ஏப். 20

இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி கடந்த 15 வருடங்களில் மும்மடங்கு அதிகரித்திருப்பதாயும் தென்னாட்டில் தான் உற்பத்தி வேகம் அதிகரித்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## காஷ்மீர் பிரதமர்

புதுடில்லி, ஏப். 20

காஷ்மீர் பிரதமமந்திரி திரு. ஸாதிக் பிரதமர் நேரு, மந்திரிகள் சாஸ்திரி, நந்தா, சவான், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இந்தியாவுடன் காஷ்மீரின் இணைப்பு இறுதியானதெனவும், இதில் எந்த மாற்றத்திற்கும் இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## அகதிகளுக்கு நஷ்டஈடு

புதுடில்லி, ஏப். 20

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து தங்கள் சொத்துக்களை விட்டு வந்த அகதிகளுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டுமென அகில இந்திய அகதிகள் சம்பந்தமான மகாநாடு கேட்டுக்கொண்டது.

## உலக வங்கி கடன்

புதுடில்லி, ஏப். 20

ரூபா 35 கோடி செலவில் அமைக்கப்படவிருக்கும் ஹல்தியா துறைமுகத் திட்டத்திற்கு, உலக வங்கி 14 கோடி ரூபாய் கடன் வழங்கியிருக்கிறது.

## ஆந்திரத்தின் முன்னேற்றம்

புதுடில்லி, ஏப். 21

மொழி, கலாச்சாரம், சமயம் ஆகியதுறைகளில் ஆந்திர பிரதேசம் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என உபஜனாதிபதி டாக்டர் ஸகிர்ஹுஸெய்ன் கூறினார். ஆந்திர பிரதேசம் ஆரம்பிக்கப்பட்ட 10-வது ஆண்டுக் கொண்டாட்டத்தில் அவர் பேசினார்.

## பிரஜாசோஷலிஸ்ட் உறுப்பினர்கள்

புதுடில்லி, ஏப். 21

பிரஜாசோஷலிஸ்ட் கட்சியைச்சேர்ந்த 20 உறுப்பினர்கள் இங்கு கூடி நாட்டில் சோஷலிஸ்ட் சக்திகளை ஒன்றுபடுத்தவேண்டுமென்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

## உல்லாச பிரயாண கார்ப்பரேஷன்

புதுடில்லி, ஏப். 21

நாட்டில் உல்லாசப் பிரயாணத்தை அபிவிருத்திசெய்யும் பொருட்டு, கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன.

## அகதிகள் சமூகநல திட்டம்

புதுடில்லி, ஏப். 21

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கான சமூகநலத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுவருவதாய் அறிவிக்கப்பட்டது.

## தென் ஆபிரிக்காவுக்கு பிரஷ்னேவ் கடிதம்

மாஸ்கோ, ஏப். 20

ரஷ்ய ஜனாதிபதி திரு. பிரஷ்னேவ், தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அங்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் 3 ஆபிரிக்கத் தலைவர்களை விடுதலை செய்யுமாறு கோரியிருக்கிறார்.

## "பிக்குகளுக்கு அரசியல் கூடாது" —நீவின்

ரங்கூன், ஏப். 21

அரசியலிலிருந்து விலகியிருக்கும்படியும், அரசியலில் தலையிட்டு பௌத்த தர்மத்தை மாசுபடுத்தவேண்டாம் என்றும் பர்மிய புரட்சித் தலைவர் ஜெனரல் நீவின் பிக்குகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## தாக்குண்டு மரணம் சந்தேகநபர் தலைமறைவு

காங்கேசன் துறை, செவ்.

பத்தைமேனியைச் சேர்ந்த ஏ. புலேந்திரனை எம். நவரெத்தினம் என்பவர் பொல்லால் தாக்கியதாகக் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ஆபத்தான நிலைமையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

சந்தேகநபரான எம். நவரெத்தினம் இன்னும் தலைமறைவாக இருப்பதாக தெரிய வருகிறது. மல்லாகம் மாஜிஸ்டிரேட் மரணவிசாரணை நடத்தியபின், மேல்விசாரணை நடத்தும்படி காங்கேசதுறை பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளார்.

# 'பெண்கள் உழைத்தால் பெற்றுர் கவலை நீங்கிவிடும்'

## மாதர் நிலையத் திறப்பு விழாவில் வட்டுக்கோட்டை எம். பி.

சுழிபுரம், செவ்வாய்

பெண்கள் எல்லோரும் உழைக்க முற்பட்டால் பெண்களைப் பெற்றவர்கள் கவலைப் படவேண்டியேற்படாது என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தொல்புரம் மகளிர் கிராம முன்னேற்றச்சங்க புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வலிமேற்கு காரியாதிகாரி திரு. டபிள்யு. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

எமது இனத்தின் சரித்திரத்தில் இன்று பல மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. வெளிநாட்டு மூலதனம் குறைந்துவிட்டது. இந்த நிலையில் நாம் எமது இனத்தின் நிலைமையை சிறிது சிந்திக்கவேண்டும். குடும்பத்தை காக்கும் பொறுப்பை ஆணும் பெண்ணும் சரிசமமாக பகிர்ந்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் தான் வாழ்க்கை செவ்வனே அமையும். இஸ்ரேல் நாட்டை பொன் கொழிக்கும் நாடாக ஆணும் பெண்ணும் சரிசமமாக பாடுபட்டு உழைத்து முன்னேற்றினர்கள். கடந்த காலத்தைப் போல் நாம் வாழ முடியாது என்பதை நாம் நன்கு அறிவோம். பெண்கள் எல்லோரும் உழைக்க முற்பட்டால் பெண்களைப் பெற்ற தந்தையர்கள் ஏன் கவலைப்படவேண்டும். நாட்டு நிலைமைக்கு ஏற்ற வகையில் தேவையை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தேவையைப் பூர்த்தியாக்கும் வகையில் நாம் எத்தொழிலையும் செய்தல் வேண்டும். எமக்கு வேண்டிய உணவு உடை போன்றவற்றை எமது உழைப்பால் ஆக்கிக்கொள்ள வேண்டும். பெயருக்காகத் தொழிலைச் செய்துகொண்டு தேவையற்ற பொருள்களை செய்து குவிப்போமானல் பயன் ஏதும் இல்லை. பெண்கள் தையல் வேலை செய்யும் போது பூப்போடும் வேலையை மட்டும் செய்யக்கூடாது. அதனுல் பெரும் பயன் ஏற்படாது. எமது தேவையை அறிந்து தொழிலை செய்தால் அதிக லாபம் கிடைக்கும். மகளிர் நிலையம் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னின்று உழைக்க வேண்டும். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், எமது பெண்கள் வீடுகளில் வீண் வம்புதும்புகள் பேசி காலத்தைப் போக்காமல் நல்ல வழியில் வாழ்வை அமைத்துக்கொள்ள இது போன்ற சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டது மிகவும் வரவேற்கப்படவேண்டியது என்றுர்.

திரு. வி. நாகலிங்கம், திரு. ஆர். நடராசா மற்றும் பலரும் பேசினர்.

---

## வெற்றுப் பீப்பாய்

கோலாலம்பூர், ஏப். 21

"இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணே ஒரு வெற்றுப்பீப்பாய். அவரோடு எங்களுக்கு அலுத்துவிட்டது" என மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

## இ. போ. ச. சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், புதன்

அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து இ. போ. ச.வினர் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்குமிடையில் மற்றுமொரு போக்குவரத்துச் சேவையை நடத்த முடிவுசெய்துள்ளனர்.

தாளையடியிலிருந்து கிளிநொச்சிக்கு ஏற்கனவே இருக்கும்சேவையோடு இன்னுமொரு சேவை நடைபெறும்.

---

## கட்டுரைப் போட்டி

மாதகல், செவ்.

மாதகல் நுணசை முருகமூர்த்திப் பெருமான் கோவிலில் இன்று "தடுத்தாட்கொள்ளும் அற்புதம்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்படும். இந்தச் சொற்பொழிவை கேட்டு அதை கட்டுரையாக எழுதிக்கொடுப்பவர்களில் சிறந்த முதல் மூன்று கட்டுரைகளை எழுதியவர்களுக்கு முறையே ரூ. 50, ரூ. 30, ரூ. 20 பரிசாக வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## சட்டவிரோத சாராயம் வைத்திருந்தாராம்

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்பேரில் புன்னலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ரி. கந்தையா, சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட சாராயமும் அதற்கான உபகரணங்களுடன் அளவுக்குக் கூடுதலான அரசினர் சாராயமும் வைத்திருந்ததாகக் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## செய்திச்சுருக்கம்

பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் அதிகமான கடிதங்கள் தவருகக் கையாளப்பட்டுவிடுவதாகவும் பல களவாளப்பட்டு விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அநேகமான கடிதங்களுள் முப்பது ரூபாவுக்கு மேல் பெறுமதியான பவுண் நாணய நோட்டுக்கள் இருப்பதனுலேயே இவ்வித மோசடிகள் இடம்பெறுவதாக தபால் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

●

அநுராதபுர ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களுக்கு வழங்கப்படுவதற்கென கொடுக்கப்படும் கோழிக்குஞ்சுகள் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று உணவு வகைகளும் கடத்தப்படுவதாக நோயாளர்கள் சுகாதாரமந்திரிக்குப் புகார் தெரிவித்துள்ளனர்.

●

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் சார்பில் வளர்ந்தோர் கல்வி வகுப்பு ஆரம்பிக்கப்படவிருக்கிறது. வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களில் இவ்வகுப்பு தொல்புரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நடத்தப்படும்.

●

நாதஸ்வர வித்துவான் காருகுறிச்சி அருணசலத்தின் மறைவு குறித்து மிக்க துயரம் அடைந்துள்ளதாகவும் உலகிலுள்ள தமிழர்களையெல்லாம் தமது இசையால் மயக்கி வந்த அவரது பிரிவு கர்னடக இசைக்கு பெரும் இழபபு என்றும் இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

---

## சீரணி நாகம்மாள் கோவில் உற்சவம்

சண்டிருப்பாய், செவ்

சரித்திரப் பிரசித்தி பெற்ற சண்டிருப்பாய் சீரணி நாகம்மாள் கோவில் வருடாந்த உற்சவம் சென்ற வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. வருகிற ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# "அல்விஸை கைதுசெய்வது நியாயம் எனக் கூறினேன்"

## சதிவழக்கில் சப்இன்ஸ்பெக்டர் அளித்த சாட்சியம்

கொழும்பு, செவ்வாய்

நாக்கியாதெனிய தோட்டத்தில் தொழிலாளர் குழப்பம் இருந்ததாலும், திரு. அல்விஸ் தொழிலாளர் தலைவராய் இருந்ததாலும், அவரைக் கைதுசெய்வது நியாயம் எனகளுத்துறை உதவி பொலிஸ் பயிற்சிக்கல்லூரியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. வி. எஸ். ஓ'. ஏ. எஸ். பி. யிடம் தாம் கூறியதாக சதிவழக்கில் சாட்சியமளித்த சப்-இன்ஸ்பெக்டர் எப். ஆர். ரத்தினசிங்கம் தெரிவித்தார். காலி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. பெரேரா கேட்டுக்கொண்டதற்கிணங்க அடுத்து செய்யவேண்டிய நடவடிக்கை பற்றி கேட்கும் பொருட்டு திரு. ஓரைச் சந்திக்க நான் போனேன் என்றும் அவர் கூறினர்.

நேற்று சதிவழக்கு ஆரம்பமானபோது 8-வது எதிரி மேஜர் லயோலாவும், 23-வது எதிரி திரு. ஜேக்ஸனும் கோர்ட்டில் ஆஜராகியிருக்கவில்லை. தாங்கள் சுகவீனமுற்றிருப்பதால் வரமுடியாதது குறித்தும், தாங்கள் இல்லாமலே வழக்கை தொடர்ந்து நடத்துமாறும் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாக நீதியரசர் திரு. சன்ஸோனி தெரிவித்தார்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த 31 வயதான ஜேமிஸ் என்ற சாரதி. ஓய்வு பெற்ற சப் இன்ஸ்பெக்டர் திரு. கெமரோன் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

---

## மன்றம் அனுதாபம்

கொழும்பு, புதன்

மதுரை மணிநகர் சரஸ்வதி உயர் நிலை பாடசாலை இடிந்து விழுந்ததால் உயிரிழந்த மாணவிகள், ஆசிரியர்களின் மரணம் குறித்து 'அமரகவி பாரதியார் நாடக மன்றம்' அனுதாபம் தெரிவித்துள்ளது.

நாகசுர மேதை காருகுறிச்சி அருணசலத்தின் மரணம் குறித்தும் மன்றம் அனுதாபம் தெரிவித்துள்ளது. அண்மையில், மன்றத்தின் கூட்டம் நடைபெற்றபொழுது இவ்விரு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேறின.

---

## சங்கீத நாட்டிய சங்க கூட்டம்

கொழும்பு, செவ்.

இலங்கை சங்கீத நாட்டிய சங்கத்தின் 8-வது வருடாந்த பொதுக் கூட்டம் சென்ற 7-ம் திகதி வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் 1964-ம் வருடத்துக்கான நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். நடராசா' உப தலைவர்கள்: திருமதி எல். செல்வத்துரை, டாக்டர் (செல்வி) எல். முத்துவேலு, கௌரவ பொதுக் காரியதரிசி: திரு. ஆர். ஸ்ரீகாந்தன், கௌரவ துணைக்காரியதரிசி: திரு. ஈ. சி. ஞேபேர்ட்ஸ், கௌரவ பொருளாளர்: திரு. ஏ. முத்துலிங்கம், நடன காரியதரிசி: திருமதி பே. விமலசிங்கம், நாடக காரியதரிசி: திருமதி ஐ. மகாதேவா, சங்கீத காரியதரிசி: திருமதி எஸ். தனபாலசிங்கம். கமிட்டியின் மற்ற அங்கத்தவர்கள்: செல்வி. என். ரத்தினம், திரு. ஏ. திருச்செல்வம், திருமதி. ஏ. தாமோதரம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க




பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'பிரீடம்' மார்க் கற்பூரம்.
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு
தயாரிப்பாளர்கள்.
பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 22-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் — எஸ். ஸ்ரீநிவாசன், 7-30 பாட்டு — பி. வி. கோபாலகிருஷ்ணன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்னைகள், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக் கோவை — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 மழலை சுப்ரமணியபாரதியாரின் திருவிளையாடற் புராணக் கீர்த்தனைகள்.

மாலை 5-15 எஸ். கணபதிப்பிள்ளை — வயலின், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 தமிழில் ஷேக்ஸ்பியர் — சித்திரம், 7-45 இரவு மலர் — நாடகம் — செல்வம் எழுதியது, 8-00 திரைப்பட இசை, 8-45 குரல் இசை, 9-45 இசைமாலை, 10-00 எஸ். கணபதிப்பிள்ளை — வயலின்.

---

## ராஜ்யசபையில் விஸ்வாசப் பிரமாணம்

புதுடில்லி, ஏப். 21

டில்லி ராஜ்யசபாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இன்று விஸ்வாசப் பிரமாணம் செய்துகொண்டனர். சுதந்திரக்கட்சி இப்போது ராஜ்யசபையில் எதிர்க்கட்சியின் அந்தஸ்துக்குவந்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளின் அந்தஸ்தை சுதந்திரா இப்போது கைப்பற்றியிருக்கிறது.

## "யங்லயன்ஸ்" கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

சென்ற ஞாயிற்றுக்கிழமை வாலிபர்களுக்கும், சம்சாரிகளுக்குமிடையில் நடைபெற்ற 'யங்லயன்ஸ்' வருடாந்த கிரிக்கெட்போட்டியில் சம்சாரிகள் 7 விக்கட்டுகளாலும் 43 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றனர்.

வாலிபர்கள் முதலாட்டத்தில் 110 ஓட்டங்களும், இரண்டாவது ஆட்டத்தில் 82 ஓட்டங்களும் எடுத்தனர். சம்சாரிகள் முதலாட்டத்தில் 148 ஓட்டங்களும், இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கட் நஷ்டத்திற்கு 87 ஓட்டங்களும் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டனர்.

---

## இளைஞர் விவசாயக்கழக நிர்வாகிகள்

உரும்பராய், செவ்வாய்

உரும்பராய் இளைஞர் விவசாயக்கழகத்தின் புனருத்தாரணக் கூட்டம் இன்று கழக மண்டபத்தில் செல்வன் த. பரமநாதனின் தலைமையில் நடைபெற்றது.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: த. சீவரத்தினம், உப-தலைவர்: கு. விவேகானந்தன், காரியதரிசி: வ.ச. தனபாலசிங்கம், உப-காரியதரிசி: க. விசுவநாதன், தனாதிகாரி: த. சரவணபவானந்தன்.

கணக்குப்பரிசோதகர்களாக சு. பத்மநாதனும், சு. சிவநேசனும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## நாளொன்றுக்கு 2,200 பேனு

கொழும்பு, செவ்வாய்

ஜாஎலையிலுள்ள எக்கல கைத்தொழில் பண்ணையில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது பேனு தொழிற்சாலை நாளொன்றுக்கு 2,200 பேனுக்களை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான யந்திரங்கள் இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்டு சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் பொருத்தப்பட்டன.

# 25,000 குடும்பங்களுக்கு விவசாய வசதி

## கல்லோயா பள்ளத்தாக்கு திட்டம்

கொழும்பு, செவ்வாய்

கல்லோயாப் பள்ளத்தாக்குத்திட்டம் 25000 குடும்பங்களுக்கு புதிய விவசாய வசதியை அளிக்கும்.

இதன்படி இரண்டரை லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்படும்.

ஆஸ்திரேலியாவிலிருந்து இத் திட்டத்திற்கு ஏராளமான இயந்திரக்கலப்பைகளும், இந்தியா—ஆஸ்திரேலியாவிலிருந்து நீர்ப்பாசன என்ஜினியர்களும், இங்கிலாந்திலிருந்து ஆலை என்ஜினியர்களும் கிடைக்கும்.

ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனத்தின் உதவியும் இத் திட்டத்திற்குக் கிடைக்கவிருக்கிறது.

---

## யாழ்ப்பாணத்துக்கு . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இறுதியாக பின்வரும் பாதைகளில்மட்டும் இப்போதைக்கு புதிய போக்குவரத்து பாதைத் திட்டம் வகுப்பதென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் வழியாக கீரிமலைக்கும் பலாலி வழியாக கீரிமலைக்கும் மானிப்பாய் மூளாய் வழியாக பருத்தித்துறைக்கும் நெல்லியடி வழியாக பருத்தித்துறைக்கும் வல்வெட்டித்துறை வழியாக பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து இறுபிட்டிக்கும் கல்லுண்டாய் வழியாக காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கும் மாதகலுக்கும் (பண்டத்தரிப்பு வரை) 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை பஸ் கிடைக்கக்கூடியதாகச் செய்தல்.

இம்மாத இறுதிக்குள் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு டிப்போ மனேஜர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் வழியாக கிளிநொச்சிக்கும், பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் வழியாக கிளிநொச்சிக்கும், பருத்தித்துறையிலிருந்து அச்சுவேலி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்கள் வழியாக மூளாய்க்கும் கீரிமலை, மாதகல் ஆகிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் வழியாக ஊர்காவற்றுறைக்கும் புதிய போக்குவரத்துச் சேவைகள் நடத்துவதும் நன்மை விளைவிக்குமென கூட்டத்தில் கருதப்பட்டது.

யாழ். பிரதேச மனேஜர் திரு. ஜி. எப். மாண்ட் தலைமையில் நடைபெற்ற இக்கமிட்டிக் கூட்டத்தில் யாழ். பிரதேச இ. போ. ச. அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

---

கல்விழான்

## கொலை முயற்சி வழக்கு

### தொடர்ந்து விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கல்விழான் கொலை முயற்சி வழக்கு நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் தொடர்ந்து நான்காவது தினமாக நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கிளிநொச்சி காரியாதிகாரி திரு. ஏ. கே. விஸ்வநாதன், விதானையார் திரு. குலசேகரம் ஆகியோர் சாட்சியமளித்தார்கள்.

தான் கணபதிப்பிள்ளை வீட்டிற்கு சென்றபோது, அவர் வளவிற்குள் நின்றாரென்றும், சம்பவம் நிகழ்ந்த இடத்தை பார்வையிடமுன், கணபதிப்பிள்ளையுடன் தான் கதைக்கவில்லையென்றும் குறுக்கு விசாரணையின் போது விதானையார் திரு. குலசேகரம் கூறினார்.

இச்சம்பவம் பற்றி முதலாவதாக கிராம விதானையாரே தனக்கு தகவல் தந்தாரென்றும், இதுசம்பந்தமாக கைப்பற்றப்பட்ட துப்பாக்கி சுடமுடியாத நிலையில் கறள் பிடித்திருந்ததாகவும், அத்துப்பாக்கியில் எந்த விதமான மணமும் காணப்படவில்லையென்றும், கிளிநொச்சி காரியாதிகாரி திரு. விஸ்வநாதன் சாட்சியமளித்தபோது கூறினார்.

மேல் விசாரணை இன்று காலைவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண மாநகரசபை

### சோலைவரி முதலாம் கந்தாயம், 1964

1964-ம் ஆண்டின் முதலாம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1964-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

1964-ம் ஆண்டுக்குரிய வருடாந்த வரிமதிப்பு அறிவித்தல்கள் கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக வழமையாயுள்ள கால எல்லை 1964-ம் ஆண்டின் முதலாம் கந்தாயத்துக்கு மாத்திரம் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாக 10% வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பப்படும்பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஹட்சன் செல்வராசா,
மாநகரசபை
ஆணையாளருக்காக.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-4-64. 332

## வரி விளம்பரம்

### தேவை

நல்லமுறையில் சமைக்கக்கூடிய 2 கோக்கிகளும், 2 சப்ளையர்களும் உடனே தேவை. அனுபவத்திற்கு ஏற்றசம்பளம். தமிழர் விரும்பத்தக்கது. நேரில் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ அம்பாள் லொட்ஜ் மெயின் வீதி, முல்லைத்தீவு. 245

### காணி மலிவு விற்பனை

தென்னந்தோட்டத்திற்கேற்றதும், நெல் வேளாண்மைக்கேற்றதும், குடியிருப்புக்கேற்றதும் அதி முக்கியமான இடங்களில் அமைந்ததும், முன்னூறு பரப்பு விஸ்தீரணமுள்ளதுமான நான்கு காணித்துண்டுகள் அல்லைப்பிட்டியில் மலிவாக விற்கப்படவிருக்கின்றன. விபரங்களுக்கு என்னுடன் தொடர்புகொள்க, க. இரத்தினசிங்கம், 91, பெரியதெரு, யாழ்ப்பாணம். 242

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1947

### விற்பனைக்கு

கரணவாய் தெற்கு முதலைக்குளம் முருகையன் கோயிலுக்கு அருகாமையில் 18 1/2 பரப்பு வளவு வீட்டுடன் உடனே விற்பனைக்குண்டு. அ. சுந்தரம், மூளாய். 247

### காணி விற்பனைக்கு

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: வ. பொன்னம்பலம், 71/6, கலட்டி அம்மன்கோவில்ரோட், யாழ்ப்பாணம். 250


புத்துணர்ச்சியுடன் திகழ கோயாவின்
மெல்லினிய மணங்கமழும்
**என்டைஸ்** பாவியுங்கள்




ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு மிக சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.

மற்றும் லூவ் எப்பேர்
பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ்
கார்டீனியா
கோயா நம்பர் 5
சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

# கரியாலை, நாகபடுவான் குடியேற்றத் திட்டம்

## காணி வழங்குவதில் கஷ்டம்!

யாழ்ப்பாணம், புதன்

கரியாலை, நாகபடுவான் ஆகிய இடங்களில் குடியேறுவதற்கு விவசாயிகளுக்குகாணி கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இப்பொழுது அங்கு காணி கொடுப்பதில் சிரமமிருப்பதாகவும் குளத்தில் தண்ணீர் இல்லையென்றும் குளச் சீர்திருத்த வேலைகள் முடிவடையவில்லையென்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் கமிட்டியின் உபகுழுக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

காணிக் கச்சேரியில் இப்பகுதிகளில் குடியேறுவதற்கு விவசாயிகள் தெரிந்தெடுக்கப்பட்டாலும் இப்போதைக்கு அவர்கள் அங்கு சென்று காடு திருத்தி வேலையை ஆரம்பிக்கும் வாய்ப்பு இல்லையென்று அரசாங்க அதிபர் கூறினர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தில் அரசாங்க அதிபர், காரியாதிகாரிகள் ஆகியோருடன் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. க. சிவசுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அக்கராயன் பகுதியில் ஒரு தனியார் ஸ்தாபனத்துக்கு 250 ஏக்கர் நிலம் கொடுப்பதென தெரிவிக்கப்பட்ட யோசனையை எதிர்த்து திரு. துரைரத்தினம் கொண்டுவந்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொடிமுந்திரிச் செய்கைபற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக விவசாயப் பகுதி அதிபரைச் சந்தித்துப் பேசும் பொறுப்பு பருத்தித்துறை எம். பி. யிடம் ஒப்படைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் முந்திரிச் செய்கைக்கு ஒரு ஏக்கர் விநியோகிப்பதென முன்னர் செய்த முடிவை மாற்றி மூன்று ஏக்கர் நிலம் வழங்க வேண்டுமென்ற திரு. துரைரத்தினத்தின் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.


ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.
LANA TURNER
IN
BY LOVE POSSESSED
(Eastman Colour)
Coming on 1-5-64
TOKYO BY NIGHT


## நடிகை ராகினியின் திருமணம்

சென்னை, ஏப். 21

சினிமா நடிகை ராகினிக்கும், மலையாளத்தைச்சேர்ந்த லட்சாதிபதியும், அரசகுடும்பத்தைச் சேர்ந்தவருமான மாதவன் தம்பிக்கும், சென்னை நுங்கம்பாக்கத்தில் திருமணம் நடைபெற்றது.

சிவாஜிகணேசன், சாவித்திரி, ராஜகலோசன, ராஜம்மா ஆகியோர் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினர்கள்.

எஸ். எஸ். நாயர் சர்விஸ் சங்க நிதிக்காக ஒருலட்சரூபா நன்கொடையளிக்க மணமகன் தீர்மானித்துள்ளார்.


வெற்றிகரமான 4வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

2வது வெற்றிகரமான வாரம்!
மைலன் (கொழும்பு) நவா (கொம்பனித் தெரு)
மற்றும் 5 திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கருணநிதி
நடித்த
பணம் பந்தியிலே


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புதைக்கப்பட்ட குழந்தை உயிருடனேயே பிறந்திருக்கிறது

## கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

ஒரு குழந்தையின் சடலத்தைதான்முதல்முறையாகபிரேத பரிசோதனை செய்தது அதுதான் முதல் தடலவையும் இதற்கு முன்சிசுக்களை பிரேத பரிசோதனை செய்யவில்லையென்றும் இதில் தனக்கு போதிய அனுபவமில்லையென்றும் குழந்தை உயிருடன் பிறந்ததை நிச்சயமாக சொல்ல முடியாதென்றும் கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் சீவரத்தினம் எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கத்தினல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறினர்.

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் அவரின் மகள் சரசுவதியின் குழந்தையைக் கொலை செய்ததாகவும், குழந்தையின் பிறப்பை மறைத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் திரு. ரி. கணேசலிங்கம், திரு. விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர். கோப்பாய் பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ராஜநாயகம் வழக்கை நடத்தினர்.

டாக்டர் சீவரத்தினம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:- 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி காலை 8-30 மணிக்கு கோண்டாவிலில், நீதவான் முன்னிலையில் குழந்தையின் சடலத்தை உமலுக்குள்ளிருந்து தோண்டி எடுத்தேன். தலையில் மண் இருந்தது, முகத்தில் நான்கு காயங்கள்காணப்பட்டன. 10 மாதம் நிரம்பப் பெற்ற பிள்ளை அது. குழந்தை உயிருடன் பிறந்திருக்கிறது. இறப்பதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன் குழந்தை பிறந்திருக்கிறது.

டாக்டர், தனக்கு போதிய அனுபவம் இல்லையெனக் கூறியதை தொடர்ந்து நீதிபதி இதுசம்பந்தமான புத்தகங்களை நன்ருகப் படித்துவிட்டு அடுத்த தவணைக்கு வரும்படி டாக்டரிடம் கூறினர். மேல் விசாரணை மேமாதம் 5-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## டோக்கியோவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பைன்ஸ் ஏற்கனவே ஆயத்தமான வேலைகளைச் செய்து வருவதாக நம்பப்படுகிறது. மகாநாடு சம்பந்தமாக ஜாகர்த்தாவிலிருந்து உடனடியாக எந்தவித அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை. ஆனல் இம்மகாநாட்டை மலேசியா வரவேற்றிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. மகாநாடு நடைபெறுமுன்னர் மலேசிய தகராறு சம்பந்தமான சுகர்ணேவின் யோசனைகள் தமது பரிசீலனைக்கு அனுப்பப்படவேண்டுமென்று மலேசியப்பிரதமர் திரு.துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# பஸ் ஏரியுள் விழுந்து 6 பேர் மாண்டனர்!

கொழும்பு, செவ்வாய்

காலி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஹபாரடுவா என்னுமிடத்தில் இன்று காலை நடைபெற்ற விபத்தொன்றில் ஆறு யாத்திரீகர்கள் மரணமானர்கள், வேறும் 42 யாத்திரிகர்கள் காயமடைந்தனர்.

மாத்தறையிலிருந்து அனுராதபுரத்துக்கு யாத்திரைசென்றுவிட்டு சுமார் 50 யாத்திரிகர்கள் மாத்தறை திரும்பிக்கொண்டிருக்கையில் இந்த விபத்து நடந்தது. யாத்திரிகர்களை ஏற்றி வந்த பஸ் பாலமொன்றுடன் மோதியதால் பாலமுடைந்து பஸ் ஏரியுள் விழுந்தது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் கூடிய மக்கள் விபத்துக்குள்ளானவர்களை மீட்கும் வேலையில் ஈடுபட்டனர்.

# யாழ்ப்பாணத்துக்கு புதிய பஸ் போக்குவரத்து பாதை

## இ. போ. ச. திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் புதிய போககுவரத்துப்பாதைத் திட்டம் வகுப்பது இப்போது அவசியமென்றும் இப்போதுள்ள போக்குவரத்துப் பாதைகள் தனிப்பட்டவர்கள் பஸ் போக்குவரத்து சேவைகளை நடத்தி வந்தகாலத்தில் உபயோகிக்கப்பட்டவை என்றும் இ. போ. ச. தலைமைக் காரியாலய நேரசூசிகை மனேஜர் திரு. என். எஸ். கந்தையா யாழ்ப்பாணப் பகுதிக்கான புதிய போக்குவரத்துப் பாதைத் திட்டம் வகுப்பது சம்பந்தமாக யாழ்ப்பாணப் பிரதேச மனேஜர் காரியாலயத்தில் நடைபெற்ற புதிய போக்குவரத்துப் பாதைத் திட்டக் கமிட்டியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் எடுத்துக் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

புதிய போக்குவரத்துப் பாதைத் திட்டம் வகுக்கும்போது போக்குவரத்துச் சேவை துரிதப்படுத்துவதாகவும் ஓரிடத்திலிருந்து மற்ஞெரு இடத்துக்கு விரைவில் குறுகிய நேரத்தில் செல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும். போக்குவரத்துச் சேவையில் செலவைக் குறைக்கவும் பொது மக்கள் சௌகரியமாக பிரயாணம் செய்யவும் இத்திட்டம் வழிவகுக்க வேண்டும்.

கமிட்டிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு உடன்பாட்டுக்கு வரப்பட்ட சில விஷயங்கள் வருமாறு:

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள சகல பகுதிகளுடனும் தொடர்வு படுத்தக் கூடிய வகையில் பஸ் போக்குவரத்துச் சேவை செய்ய முடியாத நிலையிருப்பதால் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு இப்பகுதியில் ஒரு பிரயாணி இரு பஸ்களுக்கு மேல் மாறிச் செல்லாத வகையில் போக்குவரத்துச் சேவை அமைந்தால் அது திருப்திகரமாக இருக்கும்.

பகல் நேரங்களில் அரை மணித்தியாலயத்துக்கு குறையாது ஒவ்வொரு தடவையும் சகல பாதைகளிலும் பஸ் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

வீதிகள் போக்குவரத்துக்கு உதவாத நிலையிலிருந்தாலும் பெரிய பஸ்கள் அரை மணிநேரத்துக் கொருதடவை குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு சேவை செய்ய முடியாத நிலையிலிருந்தாலுமே சிறியபஸ்கள் போககுவரத்துச் சேவைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

எங்கெங்கு பெரிய பஸ்கள் உபயோகப்படுத்தப்பட முடியுமோ அங்கெல்லாம் பெரிய

(5-ம் பக்கம் பார்க்க)

## கவிஞர் பாரதிதாசன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவியென்றும் அழைக்கப்பட்டார்.

அன்னரின் சடலம் இன்று பகல் சென்னையிலிருந்து அவரின் பிறந்த இடமான புதுச்சேரிக்குக் கொண்டுசெல்லப்பட்டது. கவிஞர் பாரதிதாசனின் மறைவு குறித்து சுத்தானந்தபாரதியார், டாக்டர் மு. வரதராசனர், கம்பதாசன், பெ. தூரன் ஆகியோருட்படப் பல அறிஞர்களும், தலைவர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெறவிருந்த கவிஞர் மகாநாடொன்றுக்கு இவர் தலைமைவகிக்கவிருந்தார்.

## அனுதாபத் தீர்மானம்

நல்லூர், புதன்

காலஞ்சென்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கணேசையர் தமிழ்ச் சங்கம், அனுதாபச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

தமிழ்க் கவிதைத் துறையில் தனக்கெனத் தனியானதொரு இடத்தை, திரு. பாரதிதாசன் பெற்றிருந்தாரெனவும், அவரது கவிதைகள் தமிழ்மொழியில் அழியா இடம்பெற்றுவிட்டனவென்றும் அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிணற்றில் விழுந்து வயோதிபர் மரணம்

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த 71 வயது முதியவரான கதிர்காமர் வேலுப்பிள்ளை என்பவர் சுழிபுரம் பத்திரகாளி கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருக்கும்போது தவறுதலாகவிழுந்து மரணமானர்.

மரண விசாரணை அதிகாரி எஸ். ரி. நடராசா மரணவிசாரணை நடத்தினர். மரணவிசாரணையின்போது கோவிலருகாமையில் வசிக்கும் திரு. என். ஆசைப்பிள்ளை சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் தினமும் கோவில்கும்பிட வருவதாகவும் சம்பவம் நடந்த தினம் அவர் கிணற்றடிக்குச் சென்றதைக் கண்டதாகவும் கூறினர். சிறிது நேரத்தில் சத்தமொன்று கேட்கவே அத்திசை நோக்கித் தான் சென்றபோது ஆளைக் காணவில்லையென்றும் பின்னர் கிணற்றை எட்டிப்பார்த்தபோது காலஞ்சென்றவர் கிணற்றில் கிடக்கக் காணப்பட்டாரென்றும் கூறினர். கூக்குரலிட்டு அயலவரின் உதவியுடன் அவரைத் தூக்கி முதலுதவி செய்தும் பலன்கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி தண்ணீர் அள்ளிக்கொண்டிருக்கும்போது விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## யு. எஸ். ரஷ்ய நடவடிக்கை

### ஜெனிவாவில் வரவேற்பு

ஜெனிவா, ஏப். 21

அணு ஆயுதங்களுக்குத் தேவையான அணுசக்திப் பொருட்கள் உற்பத்தி செய்வதை ரஷ்யாவும், அமெரிக்காவும் வெட்டியிருப்பதைஜெனிவாபடைக் குறைப்பு மகாநாடு வரவேற்றது. உலகில் பதற்ற நிலையை இது தணிக்கும் என பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

புதுடில்லி, ஏப். 21

"திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவேண்டும். அப்போதுதான் இந்திய ஒருமைப்பாடு ஏற்படும்" என டில்லி சட்டசபையில் திரு. வி. வைரவத்தேவர் தெரிவித்துள்ளார்.